# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~ 
~~(குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

UNDER SECTION 173 BNSS

C 8213023

1. District மாவட்டம் : Theni PS: காவல்நிலையம் V&AC, Theni Year ஆண்டு /2025 FIR No. மு.த.அ. எண் 22/2025 Date நாள் 21/4/2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 08/04/2025 and Date to : நாள் வரை 21/04/2025
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21/04/2025 Time நேரம் : 1530 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21/04/2025 Time நேரம் : 1630 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 35 kms South
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Office of the Village Administrative Officer, Mayiladumparai Village, Andipatti Taluk, Theni District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Chellam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sadaiyan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1960 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி No. 25, Kongarevu, Kumaranthalu(P), Mayiladumparai Village, Andipatti Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Raghu, Village Administrative Officer, Mayiladumparai Village, Andipatti Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Computer typed separate sheet enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ., குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

த. செல்வம் 21.4.2025    T. R 21.4.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.4.2025 | 19.00hrs.

Name: பெயர் T. RAMESWARI
Rank: நிலை Inspector of police VKAG Theni No. எண் ……

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**2/2025**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 21.04.2025-ம் தேதி 15.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, மயிலாடும்பாறை கிராமம், கொங்கரவு, எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு.சடையன் என்பவரின் மகன் திரு.ச.செல்லம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா கொங்கரவு கிராமத்தில் எனது மனைவியுடன் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எங்களுக்கு 3 மகன்கள். மூவரும் கல்யாணமாகி தனித்தனியே வசிக்கிறார்கள். நான் பள்ளிக்கூடம் சரியாக போனதில்லை. படித்துப்பார்த்து கையெழுத்து போடுவேன். 1988ம் வருடம் நான் மயிலாடும்பாறை கிராமம் சர்வே எண்.241/6-ல், 84 செண்டு புஞ்சை நிலத்தை கடமலைக்குண்டைச் சேர்ந்த வரதராஜ் என்பவரிடமிருந்து கிரயத்திற்கு வாங்கினேன். இதே சர்வே எண்ணில் எனது நிலத்திற்கு வடபுறம் உள்ள 84 செண்டு நிலத்தை கருத்தப்பாண்டி மனைவி கொடியம்மாள் என்பவரும் மேற்படி வரதராஜீடம் இருந்து வாங்கினார். இது எங்கள் இருவர் பெயரிலும் கூட்டு பட்டாவாக பட்டா எண்.2917 ஆக பதிவாகியிருந்தது. பின்னர் இந்த நிலத்தை கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு உட்பிரிவு செய்த போது எனது பெயரில் இருந்த கூட்டுப்பட்டா தவறுதலாக ரத்து செய்யப்பட்டு அதே சர்வே எண்.241/6ல் கருத்தப்பாண்டி மனைவி கொடியம்மாள் பெயரில் இருந்த 84 செண்டு நிலம் சர்வே எண்.241/6யு ஆகவும், எனது பெயரில் இருந்த 84 செண்ட் நிலம் சர்வே எண்.241/6டீ எனவும் உட்பிரிவு செய்யப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு நான் எனது நிலத்தில் தென்னங்கன்று வளர்ப்பு மானியத்திற்கு விண்ணப்பித்த போது சர்வே எண்.241/6டீ ஆக உட்பிரிவு செய்யப்பட்ட எனது நிலத்தின் பட்டா எண்.7923-ல் எனது பெயருக்கு பதிலாக கருத்தப்பாண்டி மகன் ஜெயக்கண்ணன் என்பவர் பெயரில் மாற்றி பதிவு செய்யப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதுகுறித்து நான் எங்களது சர்வேயரிடம் எனது நிலத்தின் கிரய பத்திர நகல், பட்டா 2917, 9362, 7923 நகல்கள் ஆகியவற்றை இணைத்து பட்டா எண்.7923-ல் எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த மார்ச் மாதம் நேரில் கொடுத்தேன். அதன்படி சர்வேயர் எனது நிலத்தை நேரில் பார்வையிட்டு

புலத்தணிக்கை செய்து எங்களது நிலம் கருத்தபாண்டி மகன் ஜெயக்கண்ணன் பெயரில் பட்டா உள்ளது, என்றும் அதை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து 14.03.2025 தேதியில் கடிதம் கொடுத்தார். அத்துடன் எனது நிலத்தின் கிரய பத்திர நகல், பட்டா 2917, 9362, 7923 நகலகள் ஆகியவற்றையும் இணைத்து மயிலாடும்பாறை வி.ஏ.ஓ. திரு.ரகு என்பவரிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்வதற்காக கொடுக்கச்சொன்னார். அதன்பிறகு நான் இரண்டு நாட்கள் கழித்து மேற்படி அனைத்து ஆவணங்களையும் மயிலாடும்பாறை வி.ஏ.ஓ. திரு.ரகுவிடம் நேரில் கொடுத்து, பட்டா பெயர் மாற்றம் ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அவர் அதை பார்த்துவிட்டு பட்டாவில் பெயர் உள்ள திரு.கருத்தப்பாண்டி மகன் திரு.ஜெயக்கண்ணன் என்பவரிடம் அவரது பெயரை பட்டாவில் நீக்கிவிட்டு எனது பெயரை சேர்ப்பதற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் வாங்க வேண்டுமென்று சொன்னார். அதன்படி சம்மதப் பத்திரம் தயார் செய்து வி.ஏ.ஓ. திரு.ரகு முன்னிலையில் திரு.ஜெயக்கண்ணனும், நானும் கையொப்பம் செய்து கொடுத்தோம். அவரும் அதை வாங்கி வைத்துக்கொண்டு பிறகு வாருங்கள் என்று சொன்னார். அதன்பிறகு சிலநாட்கள் கழித்து 8.04.2025ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு வி.ஏ.ஓ. அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து எனது பட்டா பெயர் மாற்றம் பற்றி கேட்டேன். அப்போது வி.ஏ.ஓ திரு.ரகு உங்கள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமானால் ரூ.15,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அவரும் ரெடி பண்ணிட்டு வாங்க என்றார். பின்னர் எனக்கு கண் ஆபரேசன் 12.04.2025-ல் நடக்க இருந்ததால் சிகிச்சை முடித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். கண் ஆபரேசன் முடிந்த பின்பு இன்று 21.04.2025ம் தேதி திங்கள் கிழமை மயிலாடும்பாறை வி.ஏ.ஓ. திரு.ரகு அவர்களை மதியம் சுமார் 12.30 மணிக்கு அவர் அலுவலகத்தில் சென்று பார்த்து எனது பெயரில் பட்டா மாற்ற பரிந்துரை செய்ய கேட்ட போது அவர் தான் ஏற்கெனவே கேட்ட ரூ.15,000/- பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் ஏழை விவசாயி, என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியாது. கண் ஆபரேசன் செய்து வந்துள்ளேன், குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அவர் அதற்கு முடியாது என்றும், ரூ.15,000/- பணம் எனக்கு மட்டுமில்லை, ஆபிஸ் செலவிற்கும் சேர்த்துதான். இந்தக்காலத்தில் லஞ்சப்பணம் கொடுக்காமல் பட்டா கிடைக்காதுனு கராராக சொன்னார். நான் மீண்டும் பணத்தை குறைக்க சொல்லி கேட்டேன். அதற்கு அவர் ரூ.2,000/-ஐ குறைத்துக்கொண்டு ரூ.13,000/- பணத்தை நாளை 22.04.2025ம் தேதி மதியத்திற்குள் அவரது ஆபிஸிற்கு வந்து அவரை பார்த்து கொடுக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்று முடிவாகச்

சொன்னார். நான் வீட்டிற்கு சென்று எனது குடும்பத்தாருடன் பேசிவிட்டு யோசித்து பார்த்ததில் அரசாங்க வேலையை செய்ய ஏன் ரூ.13,000/- லஞ்சம் கொடுக்க வேண்டும், பாமர விவசாயி என்பதால் தானே வி.ஏ.ஓ. லஞ்சம் கேட்கிறார் என்று நினைத்தேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சமாக பணம் ரூ.13,000/- கேட்ட மயிலாடும்பாறை கிராம வி.ஏ.ஓ. திரு.ரகு என்பவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவை தயார் செய்தேன். வி.ஏ.ஓ.திரு.ரகு கேட்ட ரூ.13,000/- லஞ்சப் பணத்துடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தேனி காவல்துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வந்தேன். என்னிடம் லஞ்சம் கேட்ட மயிலாடும்பாறை வி.ஏ.ஓ.திரு.ரகு என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகாரைக் கொடுக்கிறேன். அத்துடன் சர்வேயர் கொடுத்த 14.03.2025 தேதியிட்ட பட்டா பெயர் மாற்ற பரிந்துரை கடித நகல், எங்களது நிலத்திற்கான வரைபட நகல், ஜெயக்கண்ணனுடன் செய்து கொண்ட சம்மத பத்திர நகல், எனது நிலத்திற்கான கிரயப்பத்திர நகல் மற்றும் பட்டா எண்.2917, 7923, 9362 ஆகியவற்றின் நகல்களையும் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXX (ச.செல்லம், 21.04.2025)

Sir, Received the complaint on 21.04.2025 at 15.30 hrs. Conducted confidential verification in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.02/2025, u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 21.04.2025 at 16.30 hrs. Sd/- (T.Rameswari, Inspector of Police, V&AC, Theni).

The original FIR along with the original complaint of Tr.S.Chellam, S/o.Sadaiyan, No.25. Kongarevu, Mayiladumparai Village, Andipatti Taluk, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

T.R. 21.4.2025

(T.RAMESWARI)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni Detachment.